සියලුම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
தென் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education, Southern Province

දෙවන වාර පරීක්ෂණය - 2024
இரண்டாம் தவணைப் பரீட்சை - 2024 / Second Term Test - 2024

ශ්‍රේණිය தரம் Grade	10	සුකාදරමුම් උදටර්කල්වියුම් I	කාලය நேரம் Time	ඔරු මණිත්තියාලම් ஒரு மணித்தியாலம்


නම பெயர் Name ..... විභාග අංකය சுட்டிலக்கம் Index No. .....

- ❖ **අනෙත්තු විනාක්කළුක්කුම් විටෙ තරුක.**
- ❖ **1 තොටක්කම් 40 වරෙයිලාන විනාක්කළිල් මිකප් පොරුත්තමාන විටෙයින් ඉලක්කත්තෙක් කුරිප්පිටුක.**
- ❖ **උංකළුක්කු වළංකප්පට්ට පුළ්ළිත්තාළෙප් පයන්පටුත්තුක.**

---

01. පින්වරුම් කූට්රුක්කළිල් පූරණ සුකාතාරම් තොටර්පාන සරියාන වරෙවිලක්කණමාක අමෙවතු,
1. ආන්මිකම් මට්රුම් නෝය්කළිල් ඉරුන්තු තවිර්ත්තිරුත්තල්
2. සරියාන පෝසණෙයුටන් උටර්රකෙමෙයෙප් පේණල්
3. උටල්, උළ, සමූක, ආන්මික නලන්කළිල් පූරණත්තුවම් පෙට්රිරුත්තල්
4. උටල්, උළ නලන්කළිල් පූරණත්තවම් පෙට්රිරුත්තල්

02. පින්වරුම් විටයංකළුක්කුප් පොරුත්තමාන තලෙප්පාක අමෙවතු



1) උළච් සුකාතාරම් 2) ආන්මිකච් සුකාතාරම් 3) පූරණ සුකාතාරම් 4) සුකාතාරම්

03. සරියාන වාළ්ක්කෙක් කෝලත්තෙප් පින්පට්ර එටුක්ක වේණ්ටිය නටවටික්කෙකළ්
1) උළ නෙරුක්කිටෙයෙප් පේණල්
2) අළකියර් සෙයර්පාටුකළිල් ඊටුපටල්
3) තිනමුම් උටර්පයිර්චි සෙය්තල්
4) උප්පු, කොළුප්පු අටංකිය උණවුකළෙක් කුරෙත්තුක් කොළ්ළල්

04. සාරතා පාටසාලෙයිල් පින්වරුම් නටත්තෙකළෙ වෙළික්කාට්ටුකින්රාළ්. ඉවළ්,
- විනෙත්තිරනුටන් සෙයර්පටල්
- සට්ටතිට්ටංකළෙ මතිත්තල්
- උළ නෙරුක්කිටෙයෙ මුකාමෙත්තුවම් සෙය්තල්
- සුත්තමාන නීරිනෙ අරුන්තුතල්

1) පූරණ සුකාතාරමුටෙය මාණවියාවාළ් 2) තිරමෙයාන මාණවි
3) සුකාතාර මේම්පාටු කොණ්ට මාණවි 4) නර්කුණමුටෙය මාණවි

05. සිරන්ත ආරෝක්කිය නිලෙයෙයිප් පේණුවතර්කාක පිළ්ළෙකළුම්, වළර්න්තවර්කළුම් උටර් පයිර්චියිල් ඊටුපටවේණ්ටිය නේරම් මුරෙයේ කුරිප්පතු,
1) 60 නිමිටම්, 60 නිමිටම් 2) 30 නිමිටම්, 60 නිමිටම්
3) 30 නිමිටම්, 30 නිමිටම් 4) 60 නිමිටම්, 30 නිමිටම්

06. නෝය්කළින්රි වාළ්තල්, නෝය්කළෙත් තටුත්තුක් කොළ්ළල් පෝන්ර නටවටික්කෙයාක අමෙවතු,
1) ආන්මික වළිමුරෙ 2) සමූක නලන් පේණල්
3) උළ නලම් පේණල් 4) උටල් නලම් පේණල්

Past Papers Wiki

07. மாலா, லீலா, நீலா எனும் மூன்று மாணவர்களின் உடற்றிணிவுச் சுட்டியைக் கணித்த போது நீலா கடும் உதா நிறத்தைக் காட்டியது. இவர்,
1) அதிக உடற்பருமன் 2) அயடின் குறைபாடு 3) உரிய நிறை 4) மெலிவு

08. சர்வதேச அளவீட்டுக்கு அமைய மாலாவின் உடற்றிணிவுச் சுட்டி 18.5 - 24.9 ஆகும். இவர்,
1) மெலிவு 2) பொருத்தமான நிறை 3) உடற் பருமன் 4) அதிக நிறை

09. சுதன் மாணவர்களிடையே பிரபல்யமானவர். நண்பர்களுக்கு உதவுவதில் மிகுந்த ஆர்வம் காட்டுவார். அவர்,
1) சுய புரிந்துணர்வு உடையவர் 2) உடல் ஆரோக்கியமுள்ளவர்
3) சிறந்த ஆளிடைத் தொடர்பு கொண்டவர் 4) பிரச்சினை தீர்க்கும் ஆற்றல் கொண்டவர்

10. பிள்ளைப் பருவமானது பல நிலைகளைக் கொண்டுள்ளன. இதில் 1 - 5 வரையான வயதுகள் கொண்ட பருவம்,
1) முன்பிள்ளைப் பருவம் 2) பின் பிள்ளைப் பருவம்
3) குழந்தைப் பருவம் 4) முன் பிரசவப் பருவம்

11.
. ← உரிய முறையில் தடுப்பு மருந்து வழங்குதல்
. ← தினமும் 5 உணவு வேளை வழங்குதல்
. ← அன்பும் பாதுகாப்பும் வழங்குதல்
. ← மூன்ற மாதங்களுக்கு ஒருமுறை நிறையை அளத்தல்

மேலுள்ள உடல், உளத் தேவைகளைக் கொண்டுள்ள பருவம்
1) சிசுப் பருவம் 2) குழந்தைப் பருவம்
3) பின்பிள்ளைப் பருவம் 4) முன் பிள்ளைப் பருவம்

12. தமது குழந்தைக்கு தாய்ப்பால் ஊட்டுவது தொடர்பாக கிளினிக் நிலையத்தில் நான்கு தாய்மார்கள் தெரிவித்த கருத்துக்கள் பின்வருமாறு:-

P - நான் 4 மாதங்களுக்கே தாய்ப்பால் ஊட்டினேன்.

Q - நான் 6 மாதங்களுக்கே தாய்ப்பால் ஊட்டினேன்.

R - நான் 5 மாதங்களுக்கே தாய்ப்பால் ஊட்டினேன்.

S - நான் 1 வருடத்திற்கு தாய்ப்பால் ஊட்டினேன்.

இதற்கமைய ஆரோக்கியமான பிள்ளையுடைய தாய்,
1) P 2) Q 3) R 4) S

13. முன்பிள்ளைப் பருவத்தில் உள்ள பிள்ளை ஒன்று நாளொன்றில் நித்திரை கொள்ளும் கால அளவு
1) 8 மணித்தியாலம் 2) 13 - 15 மணித்தியாலம்
3) 18 - 20 மணித்தியாலம் 4) 10 மணித்தியாலம்

14. குழந்தை பிறந்தவுடன் தாயின் மார்பகத்தில் இருந்து சுரக்கும் மஞ்சள் நிறமான திரவம் நோய் எதிர்ப்புச் சக்தியைக் கொண்ட ஒரு பதார்த்தமாகும். இது எவ்வாறு அழைக்கப்படும்?
1) கொலஸ்திரம் 2) புரதம் 3) அயடின் 4) இரும்புச்சத்து

15. பேச்சுத்திறன், சிந்திக்கும் ஆற்றலை விருத்தியுறும் பருவம்,
1) குழந்தைப் பருவம் 2) முன்பிள்ளைப் பருவம்
3) சிசுப் பருவம் 4) பின்பிள்ளைப் பருவம்

16. ஏதேனும் ஒரு பொருளின் நிறை செயற்படும் புள்ளி எவ்வாறு அழைக்கப்படும்?
1) சமநிலை 2) சடத்துவம் 3) புவியீர்ப்பு மையம் 4) கொண்ணிலை

17. நிலையான கொண்ணிலைக்கு உதாரணம்,
1) நடத்தல் 2) பாய்தல் 3) படுத்தல் 4) ஓடுதல்

18. உருவில் காட்டப்பட்டுள்ள நபர்,
1) சரியான நிலையான கொண்ணிலையில் உள்ளார்
2) பிழையான கொண்ணிலையில் உள்ளார்
3) அசையும் சரியான கொண்ணிலையில் உள்ளார்
4) பிழையான அசையும் கொண்ணிலையில் உள்ளார்



19. கொண்ணிலையைப் பேணும்போது சமநிலையைப் பேணும் காரணிகளில் அடங்குவது,
1) தாங்கு பாதத்திற்கு நேர் மேலாகப் புவியீர்ப்பு மையம் காணப்படல்
2) தாங்கு பாதங்கள் அகலமாயிருத்தல்
3) உடல் அவயவங்கள் எதிர்த்திசையில் செயற்படல்
4) மேற் கூறிய அனைத்தும்

- **பின்வரும் விடயங்களைப் பயன்படுத்தி 20 ஆம் வினாவுக்கு விடை தருக.**

A - உடலை நேராக வைத்துக் கொள்ளல்

B - இரு கைகளையம் உடம்பின் இரு பக்கங்களிலும் வைத்துக் கொள்ளல்

C - உடலின் நிறை இரு பாதங்களுக்கும் செல்லும் வகையில் தோள்களின் அகலத்திற்கு வைத்துக் கொள்ளல்.

D - முழங்கால் 120^{O} இல் மடிந்திருத்தல்

E - மணிக்கட்டுப் பகுதி 90^{O} இல் மடிந்திருத்தல்

20. இதில் சரியான நிற்றல் நிலைக் கொண்ணிலையில் அடங்குவது,
1) A,B,C 2) A,B,D 3) B,D,E 4) C,D,E

21. வொலிபோல் விளையாட்டில் அறைதல் திறனைப் பயிற்றுவிக்கும் 4 படிமுறைகளையும் முறையே குறிப்பது,
1) அனுகுதல், மிதித்தெழல், அறைதல், நிலம்படல்
2) மிதித்தெழல், அறைதல், நிலம்படல், அனுகுதல்
3) அறைதல், மிதித்தெழல், நிலம்படல், அணுகுதல்
4) அணுகுதல், அறைதல், நிலம்படல், மிதித்தெழல்,

22. வொலிபோல் விளையாட்டில் இந்த சமிக்ஞை வழங்கப்படுவது,



1) பணிக்கும் பக்கத்தைக் காட்டுதல்
2) மைதானத்திற்கு வெளியே பந்து நிலம்படல்
3) பந்தைப் பற்றுதல்
4) குறுகிய இடைவேளை

23. வலைப்பந்தாட்டத்தில் பயிற்சி அளிக்க வேண்டிய திறன்,
1) அறைதல் 2) உயர்த்துதல் 3) பாத அசைவு 4) பணித்தல்

24. வலைபந்தாட்டத்தில் இந்த சமிக்ஞை வழங்கப்படுவது,
1) பந்தை அனுப்ப வேண்டியதில்லை
2) பாத அசைவு
3) உடல் மோதுதல்
4) இடைவெளி குறைவு



25. காற்பந்தாட்டத்தில் பிரதம நடுவரின் கடமை **அல்லாதது**,
1) மைதானம் பந்து என்பனவற்றைப் பரிசோதித்தல்
2) முழுப் போட்டி நேரத்திலும் சட்ட விதிகளை அமுல்படுத்தல்
3) குற்றமிழைக்கும் போட்டியாளருக்கு தண்டனை விதித்தல்
4) உரித்தற்ற பிரதேசத்திற்குச் செல்லும் வீரர்களைச் சுட்டிக்காட்டுதல்

26. காற்பந்தாட்டத்தில் இந்த சமிக்ஞை வழங்கப்படும்
1) சுயாதீன உதை
2) பேற்று உதை
3) மூலை உதை
4) நேரடி சுயாதீன உதை



27. பின்வரும் நிகழ்ச்சிக்களில் பங்குபற்றிய இரு மாணவர்கள் தொடர்பான விடையங்களைக் கொண்டு விடையளிக்க.

போட்டியாளர் இலக்கம்	நிகழ்ச்சி
55	800 m, 300 m, 500 m
77	200 m, 100 m, சட்டவேலி 400 m

இவர்கள் பங்குபற்றிய நிகழ்ச்சிக்காகப் பயன்படுத்திய ஆரம்பிப்பு முறைகள் முறையே,
1) இலக்கம் 55 - பதுங்கு புறப்பாடு, இலக்கம் 77 நின்ற புறப்பாடு
2) இலக்கம் 55 , 77 இருவரும் பதுங்கு புறப்பாடு
3) இலக்கம் 55 , 77 இருவரும் நின்ற புறப்பாடு
4) இலக்கம் 55 நின்ற புறப்பாடு, இலக்கம் 77 பதுங்கு புறப்பாடு

28. ஓட்டப் போட்டியின் முடிவினைத் தீர்மானிக்கும் போது, முடிவுக்கோட்டினை உடலின் எந்தப் பகுதி தொட வேண்டும்?
1) முண்டம் 2) கால் 3) தலை 4) முழு உடலும்

29. 400 m சட்ட வேலி ஓட்டம் மெய்வல்லுநர் விளையாட்டு வகைப்படுத்தலில் எந்தப் பகுதியில் உள்ளடக்கப்படும்?
1) மைதான நிகழ்ச்சி
2) சுவட்டு நிகழ்ச்சியில் தூர ஓட்டம்
3) சுவட்டு நிகழ்ச்சியில் குறுந்தூர ஓட்டம்
4) சுவட்டு நிகழ்ச்சியில் மத்திய தூர ஓட்டம்

30. அருகிலுள்ள சமிக்ஞை எந்தப் போட்டியின் போது விதி மீறலுக்காக நடுவரால் காட்டப்படும்?



1) ஈட்டி எறிதல்
2) சம்மட்டி எறிதல்
3) உயரம் பாய்தல்
4) போட்டி நடை

31. நீளம் பாய்தலின் நுட்பமுறையின் படிமுறைகள் கீழே காட்டப்பட்டுள்ளன. இவற்றினை ஒழுங்கு முறையில் குறிப்பிடுக.

P - பறத்தல் Q - மிதித்தெழல் R - அணுகலோட்டம் Q - நிலம்படல்

1) R, P, S, Q 2) R, Q, P, S 3) Q, R, P, S 4) R, S, P, Q

32. 100 m x 4 அஞ்சலோட்டத்திற்காக பொருத்தமான கோல் மாற்றும் முறை
1) கலப்பு மாற்றம்
2) உட்பக்க மாற்றம்
3) வெளிப்பக்க மாற்றம்
4) பார்த்து வாங்குதல்

33. வெளிக்களச் செயற்பாடுகளினால் நாம் பெற்றுக்கொள்ளும் நன்மைகள்,
1) வாழ்வின் இன்பத்தைப் பெறலாம்
2) தன்னம்பிக்கை கட்டியெழுப்பப்படல்
3) கூட்டு மனப்பான்மை விருத்தியடைதல்
4) மேற்கூறிய அனைத்தும்

34. விளையாட்டின் வெற்றிக்காக விதிமுறைகள், ஒழுக்க விழுமியங்கள் வீழ்ச்சியடைவதனால் விளையாட்டின் கௌரவம் பாதிக்கப்படும். அவ்வாரான பாரதூரமான விடயமாக அமைவது,
1) மத்தியஸ்தருடன் முரண்படல்
2) வீரர்களுடன் முரண்படல்
3) பார்வையாளர்களுடன் முரண்படுதல்
4) தடைசெய்யப்பட்ட ஊக்க மருந்து, போதைப் பொருள் பாவித்தல்

35. ஒலிம்பிக் விளையாட்டின் நோக்கமாகக் கொள்ளக் கூடியது,
1) சிறந்த தொடர்பாடலை உருவாக்கி சர்வதேச ஒற்றுமையைப் பலப்படுத்தல்
2) சிறந்த வீரர்களைத் தெரிவு செய்தல்
3) சிறந்த பொழுது போக்கு
4) மன மகிழ்ச்சியைக் கொடுத்தல்

36. போசணைக் குறைபாட்டிற்கு முக்கிய காரணமாய் அமைவது,
1) உரிய நேரத்திற்கு உணவு உட்கொள்ளாமை
2) பிரதான உணவுவேளை போதுமாக அயாமை
3) புரத உணவின் குறைபாடு
4) மேற்கூறிய யாவும்

- வைத்தியப் பரிசோதனையின் போது X, Y, Z எனும் மூன்று மாணவர்கள் தொடர்பான தகவல்களைக் கொண்டு 37, 38, 39 எனும் வினாக்களுக்கு விடைதருக.

மாணவர்கள்	போசணைக் குறைபாடு
X	விற்றமின் - A
Y	அயடின்
Z	இரும்புச் சத்து

37. இரவில் பார்வை தெரியாமை (மாலைக்கண்) குறைபாட்டினால் பாதிக்கப்பட்ட மாணவன்,
1) X, Y 2) Y 3) Z 4) X

38. குருதிச் சோகை குறைபாடு உடைய மாணவன்,
1) Z 2) X 3) Y 4) X, Y

39. கண்டமாலை நோயினால் பாதிக்கப்பட்ட மாணவன்,
1) X 2) Z 3) Y 4) Y, Z

40. நான்கு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெற இருக்கும் ஒலிம்பிக் போட்டி இம்முறை நடைபெற இருக்கும் நாடு,
1) அவுஸ்திரேலியா - சிட்னி
2) பிரான்ஸ் - பாரிஸ்
3) ஜப்பான் - டோக்கியோ
4) கிறீஸ் - எதன்ஸ்

(1×40=40 புள்ளிகள்)

සියලුම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
தென் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education, Southern Province

දෙවන වාර පරීක්ෂණය - 2024
இரண்டாம் தவணைப் பரீட்சை - 2024 / Second Term Test - 2024

ශ්‍රේණිය தரம் Grade	10	සුකාතරමුම් උඩර්කල්වියුම් II	කාලය நேரம் Time	இரண்டு மணித்தியாலம்

නම பெயர் Name ..... විභාග අංකය சுட்டிலக்கம் Index No. .....

- **முதலாம் வினா கட்டாயமானது**
- **I ஆம் பகுதியில் இருந்து இரண்டு வினாக்களுக்கும் II ஆம் பகுதியிலிருந்த இரண்டு வினாக்களுக்குமாக மொத்தமாக 5 வினாக்களுக்கு விடை தருக.**

---

01. தரம் 10 இல் கல்வி கற்கும் நிஷா ஏனையோருடன் சிநேக பூர்வமாக நடந்து கொள்வாள். தமது வீட்டு வேலைகளை சிறப்பாக மேற்கொள்வதோடு, தனது அப்பாவின் தோட்டத்தில் ஓய்வு நேரத்தில் உதவி புரிவாள். இதனால் சிறந்த உடலாரோக்கியத்தை பேணக்கூடியதாக உள்ளது. மெய்வல்லுநர், ஒழுங்கமைக்கப்பட்ட விளையாட்டுகளிலும் தமது திறமையை வெளிப் படுத்துவாள். மேலும் ஆன்மிகச் செயற்பாடுகளிலும் கவனம் செலுத்துவாள். அவளது தங்கை தரம் 5 இல் கல்வி பயில்கின்றாள்.

(i) நிஷா பூரண சுகாதாரம் கொண்ட மாணவி என எடுத்துக் கொண்டால் அவளிடம் விருத்தியடைந்துள்ள துறைகள் யாது?

(ii) அவளது தங்கை தற்போது எந்தப் பருவத்தில் உள்ளாள்

(iii) நிஷா உட்கொள்ளும் சமநிலை உணவில் அடங்கியுள்ள போசணைப் பதார்த்தங்களைக் குறிப்பிடுக

(iv) நிஷா பங்கெடுக்கக் கூடிய மெய்வல்லுநர் நிகழ்ச்சியில் அடங்கும் எறிதல் நிகழ்ச்சிகள் இரண்டு தருக

(v) நிஷாவிடத்தில் காணப்படும் தலைமைத்துவப் பண்பு இரண்டு தருக.

(vi) விளையாட்டில் ஈடுபடும் போது ஏற்படக் கூடிய விபத்துக்கள் இரண்டு தருக.

(vii) பாடசாலையில் ஏற்படக் கூடிய உள நெருக்கிடைகள் இரண்டு தருக.

(viii) நிஷா நீளம் பாய்தலில் திறமையான மாணவி ஆவாள். அவள் பயன்படுத்தக்கூடிய நீளம் பாய்தல் நுட்ப முறைகள் இரண்டு தருக.

(ix) ஊக்க மருந்துகளை வீரர்கள் பாவிப்தால் ஏற்படும் பிரச்சினைகள் இரண்டு தருக.

(x) விளையாட்டுக்களில் ஈடுபடுவதனால் ஏற்படும் உள ரீதியான நன்மைகள் இரண்டு தருக.

(2X10 = 20 புள்ளிகள்)

பகுதி I

02. மனிதன் பல்வேறு வாழ்க்கைப் பருவங்களை எதிர்நோக்க நேரிடுகின்றன.

i) முன்பிரசவப் பருவம் தவிர்ந்த வேறு பருவங்கள் மூன்று தருக.

ii) முன் பிரசவப் பருவத்தில் நிறை வேற்ற வேண்டிய உள சமூகவியல் தேவைகள் மூன்று தருக

iii) 6 - 10 வயதில் நிறைவேற்ற வேண்டிய உடலியல் தேவைகள் இரண்டும் உள சமூகவியல் தேவைகள் இரண்டும் தருக.

(3 + 3 + 4 = 10 புள்ளிகள்)

03. நாம் அன்றாடம் பல கொண்ணிலைகளை மேற்கொள்கின்றோம். சரியான கொண்ணிலைகளைப் பேணுவதற்கு சமநிலை, புவியீர்ப்பு மையம் என்பன பேணப்பட வேண்டும்.

i) அசையும் கொண்ணிலைகள் மூன்று தருக

ii) கொண்ணிலையைப் பாதிக்கும் உயிரியற் பொறிமுறைக் காரணிகள் இரண்டும் எவை?

iii) மேசையின் மீது அமர்ந்து வேலை செய்யும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் நான்கு தருக.

(3 + 3 + 4 = 10 புள்ளிகள்)

04. பின்வரும் சவால்களுக்கு எவ்வாறு முகம் கொடுப்பீர் என்பதை சுருக்கமாக விளக்குக.

i) உமது நன்பன் செயற்கைச் சுவையூட்கள் கொண்ட உடனடி உணவுகளை தினமும் உட்கொள்வதை கேள்வியுறும் போது

ii) மேலதிக வகுப்புக்குச் சென்று வீடு செல்ல ஆயத்தமாகும் போது அன்றய தினம் பஸ் போக்குவரத்து இல்லை என்பதை கேள்வியுறும் போது

iii) அயல் வீட்டினர் சுற்றுலா சென்ற வேளை அவர்கள் தங்களது பின்பக்கத்துக் கதவினை மூடாமல் சென்றிருப்பதை நீர் அவதானிக்கும் போது

iv) விளையாட்டுப் பயிற்சி முடிந்து உமது நன்பர் மதுபானம் அருந்த உம்மை அழைக்கும் போது

v) வீட்டின் அயலில் மின் கம்பி அறுந்து தொங்கிக் கொண்டு இருப்பதை நீர் அவதானிக்கும் போது (2X5 = 10 புள்ளிகள்)

பகுதி II

05. நான்கு மாணவர்கள் பங்குபற்றிய மெய்வல்லுநர் விளையாட்டுக்கள் தொடர்பான தகவல்கள் கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. இதில்

A	ஈட்டி எறிதல், குண்டு போடுதல்
B	800m, 3000m
C	100m,200m,100mx4 அஞ்சல்
D	நீளம் பாய்தல், உயரம் பாய்தல், 400m

i) குறுந்தூர ஓட்டத்தில் பங்குபற்றும் மாணவர்கள்

ii) குறுந்தூர ஓட்டத்திற்கு வழங்கப்படும் ஆரம்பிப்பு முறையைக் குறிப்பிட்டு அதன் கட்டளை களைத் தருக.

iii) A பங்குபற்றும் எறிதல் நிகழ்ச்சிகள் தவிர வேறு எறிதல் நிகழ்ச்சி ஒன்று தருக.

iv) பாய்தலின் இரு பிரதான வகைகளும் எவை

v) நீளம் பாய்தலில் திறனை மேம்படுத்தும் பயிற்சிச் செயற்பாடு ஒன்றினை விளக்குக.

(2+2+1+2+3=10 புள்ளிகள்)

06. ஆரோக்கியமான வாழ்வுக்க போசணைமிக்க உணவுகள் அவசியமாகும்

i) மா போசணை, நுண்போசணை எனும் வகைப்படுத்தலில் நுண்போசணைக் கூறுகள் இரண்டு தருக.

ii) குறையூட்டத்தினால் ஏற்படக் கூடிய பாதிப்புகள் இரண்டு தருக.

iii) சந்தையில் மரக்கறி வகைகளையும், காய்கறி வகைகளையும் கொள்வனவு செய்வதை விட வீட்டுத் தோட்டத்தில் பயிர் செய்வதன் மூலம் கிடைக்கும் நன்மைகள் யாது

iv) போசணைக் குறைபாட்டினைத் தவிர்த்துக் கொள்வதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் மூன்று தருக. (2+3+2 +3 = 10 புள்ளிகள்)

Past Papers Wiki

- **A,B,C எனும் வினாக்களில் ஒன்றுக்கு மாத்திரம் விடை தருக.**

07.A. i) வொலிபோல் விளையாட்டின் திறன்களில் பணித்தலும் ஒன்றாகும் இதைத் தவிர வேறு இரண்டு திறன்கள் தருக

ii) பந்தைப் பணிக்கும் போது ஏற்படும் தவறுகள் மூன்று தருக..

iii) பின்வரும் சந்தர்ப்பங்களின் போது வழங்கப்படும் தீர்ப்பு யாது

a) A அணியினர் பணித்த பந்தானது B அணியினரின் கைகளில் பட்டு மைதானத்து வெளியில் செல்லல்.

b) B அணியினர் பணித்த பந்தானது வலையின் மேற் பட்டியில் A அணியின் மைதானத் திற்குள் நிலம் படல்

iv) பணித்தல் திறனை புதிய வீரர்களுக்குப் பயிற்சி அளிக்கும் பயிற்சிச் செயற்பாடுகள் இரண்டு தருக.

07.B.

i) வலைப் பந்தாட்டத்தில் பந்தைக் கட்டுப்படுத்துதல் தவிர்ந்த வேறு இரண்டு திறன்கள் தருக

ii) வலைபந்தாட்ட விளையாட்டில் மத்திய எறிகையை மேற் கொள்ளும் போது ஏற்படும் தவறுகள் மூன்று தருக.

iii) பின்வரும் சந்தர்ப்பங்களில் வழங்கப்படும் தீர்ப்பு யாது.

a) சிவப்பு அணியின் மைதானத்தின் இரண்டு கோடுகளைத் (இரண்டு வலையங்களை) தாண்டி தமது அணியினருக்குப் பந்தினைமாற்றுதல்.

b) நீல அணியின் பேற்றுக்கு எய்வோன் (GS) எய்த பந்தானது பேற்று வளையத்தில் பட்டு வரும்போது அந்த அணியின் பேறு தாக்குவோன் (GA) பந்தைப் பெற்று மீண்டும் எய்தல்

iv) எய்தல் திறனை புதிய வீரர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக மேற்கொள்ளும் இரண்டு பயிற்சிச் செயற்பாடுகள் தருக.

(1+4+5 = 10 புள்ளிகள்)

07.C.

i) காற்பந்து விளையாட்டில் பந்தை உதைத்தல் திறன் தவிர்ந்த வேறு இரண்டு திறன்கள் தருக.

ii) காற்பந்து விளையாட்டில் வீரர்கள் மைதானத்தில் இருந்து வெளியேற்றுவதற்குக் காரணமாக அமையும் பாரதூரமான தவறுகள் யாது

iii) பின்வரும் சந்தர்ப்பங்களில் வழங்கப்படும் தீர்ப்பு யாது.

a) A அணியினர் அடித்த பந்தானது B அணியின் காக்கும் வீரரின் கால்களில் பட்டு பேற்றுக் கம்பத்தினுள் செல்லல்

b) B அணியின் வீரர் உதைத்த பந்தானது எதிரணியின் பேற்றக் கம்பத்தில் பட்டு மைதானத்திற்கு மீண்டும் வந்த பந்தினை அதே அணியின் வீரர் பேற்றுக்குள் உதைத்தல்

iv) உட்பாத உதையை புதிய வீரர்களுக்குப் பயிற்சி அளிக்கும் பயிற்சி பொருத்தமான ஒரு செயற்பாட்டினை எழுதுக..

(2+3+3+2 = 10 புள்ளிகள்)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank